# பொதுக்காலம் 22ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நாம் அனைவரும் ஒரே திரு அவையாக இணைந்து பொதுக்காலத்தின் 22ஆம் ஞாயிறைக் கொண்டாடுகின்றோம். நாம் அனைவரும் ஆண்டவரின் படைப்புகளுள் தலைசிறந்து விளங்கவும், அவரின் முதன்மையான கனிகளாகவும், ஞானம் நிறைந்து அறிவாற்றலோடு விளங்கிடவும், தூய உள்ளத்தோடு ஆண்டவரைத் தேட இன்றைய வழிபாடு நம்மை அழைக்கின்றது.

ஒவ்வொரு கட்டளையும் இறைவனிடமிருந்து வருகிறது. கட்டளைகளைப் பின்பற்றி பணிந்து நடந்தால் நம் வாழ்வு வளம் பெறும். விண்ணகம் நமது நிரந்தர வீடாகும் என்பதை இன்றைய இறைவார்த்தை விளக்குகிறது. உள்ளத்தில் நல்ல சிந்தனை, நல்ல எண்ணம் இருக்கின்ற போது நம்முடைய செயல்பாடுகள் அனைத்தும் நல்லவையாகவே இருக்கும். எனவே வெளிப்புறத் தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக வாழ்வோம். இன்றைய உலகில் தூய வாழ்வு வாழ்வது என்பது மிகப்பெரிய சவால். இந்த சவாலைச் சந்தித்து தீமையை விலக்கி, நன்மையைத் துணிவுடன் செய்ய முயல்வோம். இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டுமல்லாமல் அதன்படி நடக்கிறவர்களாகவும், ஞானமிக்க மக்களாக வாழ்ந்திடும் வரம் வேண்டி இந்தத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திரு அவையை உருவாக்கி, அதனோடு என்றும் ஒன்றித்திருக்கும் எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதித்து வாழ்வு தரும் வார்த்தையான உம்மோடு என்றும் இணைந்திருக்கும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருளின் இறைவா! எங்கள் நாட்டின் தலைவர்கள் மற்றும் மக்களையும் ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி ஒற்றுமையோடு வாழவும், நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய்மையின் பிறப்பிடமே எம் இறைவா! நாங்கள் வெளிப்புறத் தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் நன்மையான காரியங்கள் செய்வதன் வழியாகவும், எங்கள் உள்ளத்தையும், ஆன்மாவையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நலம் அளிப்பவரே எம் இறைவா! பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் சிகிச்சை பெற்று வரும் அனைவரையும் தொட்டு, குணப்படுத்தி அவர்களுக்கு புதிய வாழ்வைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com